6. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு ஊராட்சி நீதிமன்றங்கள் நடவடிக்கைகள் (செல்திறன் ஆக்குதல்) மசோதா.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

'That leave be granted for the introduction of the Tamil Nadu Panchayat Courts (Validation of Proceedings) Bill, 1970.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I introduced the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம்மசோதா அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுப்பெறுதல் மசோதா.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் வண்டிகளைக் கேட்டுப் பெறுதல் மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) தொழில்கள் வாரியத்திற்குத் தேர்தல்

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

'That in order to represent the Tamil Nadu Legislative Assembly on the Board of Industries this Assembly, in accordance with Section 3 (1) (b) of the Tamil Nadu State Aid to Industries Act, 1922 (Tamil Nadu Act V of 1923) and rule XXII (2) of the Tamil Nadu Small Scale and Cottage Industries, Loans and Subsidy Rules, 1956, do proceed on a date to be fixed by the Speaker to elect two representatives on the Board of Industries constituted under the said Act in the vacancies that will arise with effect from 20th September 1970 on the expiry of the term of the present members, Thiruvalargal S. Murugian and G. Bhuvarahan on the Board of Industries.'

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.